அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 35/92

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 07
1992, டிசம்பர் மாதம் 21ஆந் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
பிரதான செயலாளர்கள்,
அரசாங்க அதிபர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள்,
பகுதிச் செயலாளர்கள்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்.

அரசாங்க உத்தியோகத்தர்களின் விசாரணைகளைத் துரிதப்படுத்தல் தாபன விதிக்கோவைக்குத் திருத்தங்கள்
அத்தியாயம்- XLVIII

---

அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணைகளைத் துரிதப்படுத்துதல் மீது வெளியிடப்பட்ட 1990.08.17ஆந் தேதியிட்ட 35/90ஆம் இலக்கத்தையும் 1991.03.18ஆந் தேதியிட்ட 35/90(i)ஆம் இலக்கத்தையும், 1992.03.03ஆந் தேதியிட்ட 35/90(ii)ஆம் இலக்கத்தையும் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளுக்குப் பதிலாக இச்சுற்றறிக்கையின் பின்வரும் ஏற்பாடுகள் செயல் வலுவிலிருக்கும். இதற்கமைய தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் பகுதி 11இன் 12:1, 12:7, 13:2, 14:4, 14:5, 18:1:1, 21:6ஆம் உபபிரிவுகள் திருத்தப்படுகின்றன. 5:2:1, 10:1:1, 10:1:2, 12:1:1, 12:1:2, 12:2:1, 12:7:1, 12:7:2, 14:5:1, 18:3:1, 18:3:2, 18:3:3, 18:6, 21:7ஆம் புதிய உபபிரிவுகள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன.

02. 5:2:1 குற்றப் பத்திரமொன்று வழங்கப்பட்டதிகதியிலிருந்து மூன்றுக்கு மேற்பட்ட மாதங்கள் முடிவடைந்திருக்குமிடத்து சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் பொருத்தமான முறையில் பதவியில் மீளவமர்த்தப்பட்டு விசாரணை நடத்துகையும் அறிக்கை சமர்ப்பிக்கப்படுதலும் உபபிரிவு 12:7இல் விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். குற்றப் பத்திரமொன்று வழங்கப்படாமலிருக்குமிடத்தும் கூட உத்தியோகத்தர் இதைப் போல பதவியில் மீள அமர்த்தப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் குற்றப் பத்திரமொன்று வழங்கப்பட்டு விசாரணை பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கை மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எனினும் உத்தியோகத்தர் மோசடிக்காக இடைநிறுத்தஞ் செய்யப்பட்டிருக்குமிடத்து:

(1) சாட்டியுரைக்கப்பட்ட மோசடி பற்றி விசாரணை செய்யப்பட்டு குற்றப் பத்திரம் இடைநிறுத்தத் திகதி யிலிருந்து ஒரு மாதத்திற்குள் அவரைப் பதவியில் மீள வமர்த்தாமல் வழங்கப்படல் வேண்டும்.

(2) அதன் பின்னர் மூன்று மாதங்களுக்குள் விசாரணை பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. 10.1.1 குற்றப் பத்திரம், இடைநிறுத்தத் திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் வழங்கப்படல் வேண்டும். பண்டசாலைக்குப் பொறுப்பான உத்தி யோகத்தரொருவரின் விடயத்தில் அவர் பொறுப்பாகவிருந்த பண்ட சாலையில் இருப்பு கணக்கெடுக்கப்படுதல், தேவையாகவிருக்கலா மாகையினால் இடைநிறுத்தத் திகதிக்குப் பின்னர் மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்குள் அவருக்கு குற்றப் பத்திரம் வழங்கப்படல் வேண்டும். குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய சகல வகையான பொருட்களின் முழுமையான கணக்கிடுகை தேவையாகவிருக்கும்.

10.1.2 குற்றப் பத்திரமொன்று வழங்கப்பட்டதன் பின்னர் ஒழுக்காற்று அதி காரி ஒழுக்காற்று விசாரணையை மீண்டும் தொடங்கு முன் அக்குற்றப் பத்திரத்தை திருத்தக் கூடும். எனினும் அத்தகைய விடயமொன்றில் குற்றம் சாட்டப்பட்ட உத்தியோகத்தருக்கு 11.5, 11.6ஆம் உப பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு அந்த திருத்தப்பட்ட குறுக்கு விசாரணைக் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக விடயத்திற்கேற்ப அத் தகைய சாட்சிகளுக்கு அல்லது ஆவணங்களுக்கு எதிராக தம்மை பாது காத்து எதிர்வாதம் செய்வதற்கு அவருக்கு போதியளவு சந்தர்ப்ப மொன்று வழங்கப்படல் வேண்டும்.

04. 12.1 விசாரணை உத்தியோகத்தரொருவர் எந்த வகுதியைச் சேர்ந்தவராக விருக்க வேண்டுமென்பதைத் தீர்மானிக்கும் விடயம் ஒழுக்காற்று அதிகாரியின் பொறுப்பாகும். குற்றஞ் சாட்டப்பட்ட உத்தியோகத்தரொருவர் விசாரணை உத்தி யோகத்தராக சட்டத்தரணியொருவரை வைத்திருக்கக் கருதுமிடத்து அவர் அதை போதியளவு காரணங்களைக் குறிப்பிட்டு ஒழுக்காற்று அதிகாரியிடம் தெரிவிக்கும் உரிமையையுடையவராவர்.

12.1.1 ஒழுக்காற்று அதிகாரி சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கிடையி லிருந்து அல்லது அரசாங்க நிருவாக அமைச்சில் பதிவு பெற்ற விசா ரணை உத்தியோகத்தர்கள் குழாமிலிருந்து விசாரணை உத்தியோகத்தர் ஒருவரைத் தெரிவு செய்யலாம்.

12.1.2 அரசாங்க நிருவாக அமைச்சில் பதிவு பெற்ற விசாரணை உத்தியோ கத்தர்கள் குழாமில் பின்வரும் விசாரணை உத்தியோகத்தர்கள் வகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

(1) பதவிநிலைத் தரப் பதவிகளை வகித்து இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்கள்.

(2) 10 வருடங்களிலும் கூடிய அனுபவமுள்ள சட்டத்தரணிகள் இக்குழாம், காலத்துக்குக் காலம் திருத்தியமைக்கப்பட்டு அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகள் மூலம் வெளியிடப்படும் நியாய சபை ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருக்குமிடத்து ஒழுக்காற்று அதிகாரி அவர்களில்ஒருவரை தலைவராக நியமிப்பார்.

05. 12.2.1 விசாரணை உத்தியோகத்தர்களை நியமிக்கும் கடிதத்தில் பின்வருவோர் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும்.

(1) அவர்கள் பணிபுரியும் உத்தியோகத்தர்களாகவிருக்குமிடத்து பின்வரும் பந்தி அவர்களுடைய நியமனக் கடிதத்தில் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும்.

"அரசாங்க சேவையில் விசாரணையொன்று மேற்கொள்ளப்படுதல் தங்களுடைய கடமையின் ஒரு பகுதியாகுமென தங்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. தாங்கள் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 14.1ஆம் பிரிவிற்கமைய விசாரணையை பாரபட்சமின்றியும் துரிதமாகவும் நடத்தி இக் கடிதத்தில் குறித்துள்ள திகதியிலிருந்து தங்களுடைய அறிக்கையை மூன்று முழு மாதங்களுக்குள் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வண்ணம் செய்யத் தவறுவது தங்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் விளைவை ஏற்படுத்தலாம்."

(2) அவர்கள் அரசாங்க நிருவாக அமைச்சில் பதிவு செய்யப்பட்ட குழாமிலுள்ளவர்களாகவிருக்குமிடத்து பின்வரும் பந்தி சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும்.

"தாங்கள் தங்களுடைய அறிக்கையை இக்கடிதம் பெற்ற திகதியிலிருந்து மூன்று முழு மாதங்களுக்குள் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வண்ணம் செய்யத் தவறுவது பின்வரும் கழிப்புகள் செய்யப்படும் விளைவை ஏற்படுத்தும்.

(அ) ஒரு மாத காலத் தாமதத்திற்கு அப்பால் தங்களுடைய படியின் 10%

(ஆ) இரண்டு மாத காலத் தாமதத்திற்கு அப்பால் தங்களுடைய படியின் 20%

(இ) மூன்று மாத கால தாமதத்திற்கு அப்பால் தங்களுடைய படியின் 35%

(ஈ) நான்கு மாத கால தாமதத்திற்கு அப்பால் இக்கடிதத்தில் செய்யப்பட்டுள்ள நியமனம் மீளப் பெறப்படுவதோடு பெயர்

06. 12.7 விசாரணை உத்தியோகத்தர் விசாரணை தம்மிடம் கையளிக்கப்பட்ட திலிருந்து மூன்று மாதங்களுக்குள் விசாரணையைப் பூர்த்தி செய்து தமது அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும். இது செய்யப்படாவிட்டால் அல்லது தாமதம் அத்தகைய நிகழ்வுகள் 3 மாத காலத்தில் ஏற்பட்டபின் உடனடியாக அல்லது ஏற்படுமெனத் தெரிந்த பின் உடனடியாக நியாயமானவைகளும் தவிர்க்க முடியாதவைகளுமான காரணங்களின் நிமித்தம் ஏற்பட்டதாக ஒழுக்காற்று அதிகாரிக்குத் தெரிவிக்கப்படாவிட்டால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக அவரைப் பற்றி அவருடைய சொந்த ஒழுக்காற்று அதிகாரிக்கு அறிவிக்கப்படல் வேண்டும். விசாரணை உத்தியோகத்தர் அரசாங்க நிருவாக அமைச்சிலுள்ள விசாரணைக் குழாமில் உள்ளவராகவிருக்குமிடத்து உபபிரிவு 12.2.1 இன் (2)ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

12.7.1 விசாரணை உத்தியோகத்தர் தமது அறிக்கையை 3 மாதங்களுக்குள் சமர்ப்பிக்காவிட்டால் 18.3.1ஆம் உட்பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட இந்த வகுதிகளைத் தவிர்ந்த பிற குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தர்கள் மீளப் பணிக்கமர்த்தப்பட்டு விசாரணைகள் நடத்தப்படல் வேண்டும்.

12.7.2 அரசாங்க நிருவாக அமைச்சின் செயலாளர் விசாரணைகளைத் துரிதமாக முடிப்பது தொடர்பில் தேவையான சமயங்களில் தேவையான அறிவுறுத்துரைகளை செயலாளர்களுக்கும் திணைக்களங்களின் தலைவர்களுக்கும் நியாய சபைகளுக்கும் விசாரணை உத்தியோகத்தர்களுக்கும் வழங்குவார்.

13.2 ஒழுக்காற்று அதிகாரி குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தரின் சார்பில் பிரதிநிதித்துவம் வகிப்பதற்கு பணிபுரியும் அல்லது இளைப்பாறிய உத்தியோகத்தர் ஒருவரையே அனுமதிப்பார். ஓர் உத்தியோகத்தர் பல குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தர்களின் சார்பில் பிரதிநிதித்துவம் வகிக்கலாம். ஒழுக்காற்று அதிகாரி அரச சட்டவாதியினால் அரசாங்கம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கலாம். அச்சந்தர்ப்பத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தர் சட்டவறிஞரினால் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் உரிமையையுடையவராவர்.

08. 14.4 விசாரணை உத்தியோகத்தர் எவரும் குற்றப் பத்திரமொன்றைத் திருத்தும் அதிகாரத்தையுடையவராகவிருக்கமாட்டார். ஒழுக்காற்று விசாரணை தொடங்கப்பட்டதன் பின்னர் குற்றப் பத்திரத்திற்கான திருத்தங்கள் ஒழுக்காற்று அதிகாரியின் எழுத்து மூல அறிவுறுத்துரைகளைப் பெற்றதன் பேரில் வழக்குரை உத்தியோகத்தரினால் மட்டுமே செய்யப்படல் வேண்டும். ஒழுக்காற்று விசாரணை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் குற்றச்சாட்டுக் கூற்றுக்கான பகுதியளவிலான திருத் / ங்கள் அல்லது புதிய

குற்றச்சாட்டுகளைச் சேர்த்தல் இரண்டு தடவைகள் செய்யப்படுவதற்கு மட்டுமே அனுமதிக்கப்படும். அதன் பின்னர் மட்டுமே நியாய சபை எதிரி தரப்பு உத்தியோகத்தரின் கோரிக்கையின் பேரில் தேவையானதாகக் கருதப்படும் சாட்சிகளை அழைப்பதற்கு அல்லது புதிய சாட்சிகளை அழைப்பதற்கு அல்லது ஏதேனும் மேற்பட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அனுமதித்தல் வேண்டும். எனினும் அத்தகைய விடயமொன்றில் குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தருக்கு 11.5, 11.6ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய விடயத்திற்கேற்ப அத்தகைய திருத்திய குற்றச்சாட்டுகளுக்கு எதிராக எதிர் வாதம் புரிவதற்கு அல்லது சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்வதற்கு அல்லது ஆவணங்களைப் பரிசீலனை செய்வதற்கு போதியளவு சந்தர்ப்பமொன்று வழங்கப்படல் வேண்டும்.

09. 14.5 நியாய சபையினால் எந்த நடைமுறை விடயத்தின் மீதும் எடுக்கப்பட்ட தீர்மானமும் அல்லது நடைமுறை அடிப்படை மீது எடுக்கப்பட்ட எந்த ஆட்சேபனையும் இறுதியானதாகவிருக்கும். அத்தகைய விடயங்களில் நியாய சபைகள் வழிகாட்டப்பட வேண்டிய கோட்பாடு "விசாரணையின் குறிக்கோள் உண்மையைத் துரிதமாக அடைய வேண்டும் என்பதும் நுட்பங்கள் நடைமுறை நுட்பங்களாகவிருந்தாலும் சரி அவை விசாரணை முன்னேற்றத்தைத் தடைசெய்ய அனுமதித்தலாகாது" என்பதுமாகும்.

14.5.1 குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தரொருவர் வேண்டுமென்றே விசாரணையொன்றைத் தாமதப்படுத்தினால் அல்லது தடை செய்தால் பின்வரும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(1) அவர் இரண்டு அடுத்தடுத்த விசாரணைத் திகதிகளில் ஏற்றுக் கொள்ளத் தக்க காரணங்களின்றி வராமலிருக்குமிடத்து விசாரணை ஒரு தலைப்பட்சமாக நடாத்தப்படல் வேண்டும்.

(2) அவர் பிற எந்த விதத்திலாவது தடை ஏற்படுத்தி விசாரணை உத்தியோகத்தர் தமது விசாரணையை 12.7ஆம் உபபிரிவில் குறிக்கப்பட்டுள்ள மூன்று மாதங்களுக்குள் பூர்த்தி செய்ய முடியாமலிருக்குமிடத்து அத்தடை பற்றி விசாரணையைப் பூர்த்தி செய்வதற்குக் குறிப்பிட்ட மூன்று மாத காலப்பகுதி முடிவடைவதற்கு முன் ஒழுக்காற்று அதிகாரிக்கு அறிவிக்கப்படல் வேண்டும். விசாரணை உத்தியோகத்தர் குற்றம் சாட்டப்பட்ட உத்தியோகத்தரால் விசாரணை வேண்டுமென்றே தடைப்படுத்தப்படுகின்றது என்ற தமது நம்பிக்கைக்கான முழுக்காரணங்களையும் கொடுத்தல் வேண்டும்.

(3) ஒழுக்காற்று அதிகாரி விசாரணை உத்தியோகத்தரால் செய்யப்பட்ட முறைப்பாடு சரியானதெனத் திருப்திப்பட்டால் உத்தியோகத்தரை பதவியில் மீளமர்த்துவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படலாகாது. விசாரணை பூர்த்தி செய்யப்

பட்டதன் பின்னர் மட்டுமே அவர் பதவியில் மீளமர்த்துவதற்கு நடவடிக்கை, எதுவும் எடுக்கப்படலாகாது. விசாரணை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் மட்டுமே அவர் பதவியில் மீள்ளமர்த்தப்படல் வேண்டும். அவர் ஏற்கனவே பதவியில் மீள்ளமர்த்தப்பட்டிருந்தால் அரைச் சம்பளம் கூட வழங்கப்படாமல் அவர் வேலையிலிருந்து மீள இடைநிறுத்தஞ் செய்யப்படல் வேண்டும். அவர் குற்றஞ்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டாலும் கூட இக்காலப் பகுதிக்கு அவருடைய சம்பளம் வழங்கப்படலாகாது."

10. 18:1:1 நீதி மன்றமொன்றில் வழக்கொன்றைத் தொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருந்தால் அல்லது ஏற்கனவே வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தால் அந்த வழக்கு பூர்த்தி செய்யப்படும் வரை விசாரணைகளைத் தாமதிக்கத் தேவையில்லை. அவர் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டதற்காக மட்டும் அவரை மீளவும் பணிக்கமர்த்தத் தேவையில்லை. இத் தொடர்பில் பின்வருவன ஞாபகத்தில் வைத்திருக்கப்படலாம்.

(1) நீதிமன்றங்களில் குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒருவரை குற்றஞ் சாட்டுவதன் நோக்கம் அவர் நாட்டின் சட்டத்துக்கு எதிராக ஏதேனும் தவறுகளைப் புரிந்துள்ளாராவென்பதை தீர்மானிப்பதற்கானதாகும்.

(2) குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒருவர் நீதிமன்றத்தினால் அவர் குற்றமற்றவர் என நிருபிக்கப்பட்டால் மட்டுமன்றி பிற காரணங்களின் பொருட்டும் விடுவிக்கப்படலாம். அத்தகைய சில சந்தர்ப்பங்கள் முறையற்ற விதத்தில் வழக்கைத் தாக்கல் செய்தல், வழக்கை மீளப் பெறுதல், பொருத்தமற்ற முறையில் குற்றச் சாட்டுகள் தயாரிக்கப்படுதல், முறையீட்டாளர் அல்லது சாட்சிகள் வழக்கில் சமூகமளிக்காமலிருத்தல், இரண்டு கட்சிக்காரர்களுக்கிடையே தீர்வு ஏற்படுதல் அல்லது பிற ஏதேனும் காரணத்தின் பொருட்டு வழக்கைத் தொடர்ந்து நடத்த முடியாமலிருத்தல் ஆகியனவாகும்.

(3) விசாரணையொன்றின் போது உத்தியோகத்தரொருவருக்கெதிராகச் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளை பரிசீலனை செய்வதன் நோக்கம் அவர் ஏதேனும் ஒழுக்காற்றுக்கெதிரான நடவடிக்கையை எடுத்துள்ளாரா அல்லது அரசாங்கத்திற்கும் அரசாங்க சேவைக்கும் நட்டத்தை ஏற்படுத்தியுள்ளாரா அல்லது கெட்ட பெயர் ஏற்படுத்தியுள்ளாராவென்பதைத் தீர்மானிப்பதாகும். குற்றஞ் சாட்டப்பட்டவர் சட்டமுறையான தவறைப்புரிந்துள்ளாராவென்பதைத் தீர்மானிப்பது விசாரணை உத்தியோகத்த

(4) எனினும் இது, கட்டுக்காப்பில் உத்தியோகத்தரொருவர் எடுத்துக் கொள்ளப்படாவிட்டாலும் அவருக்கு எதிராக ஒழுக்காற்று அதிகாரி பிணைக்கள நடவடிக்கை எடுப்பதைத் தடை செய்யமாட்டாது. உத்தியோகத்தர் கட்டுக்காப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்குமிடத்து ஒழுக்காற்று நடவடிக்கைகள் அவர் விடுவிக்கப்பட்ட பின் தொடரப்படலாம். நீதி மன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கவுள்ள அடுத்த வேளையில் அல்லது ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அதே வேளையில் ஒழுக்காற்று விசாரணைகளை ஒழுக்காற்று அதிகாரியொருவர் மேற்கொள்வதில் ஆட்சேபனை எதுவுமில்லை.

11. 18:3:1 இலங்கையின் சட்டத்தின் கீழ் குற்றவாளியென நிரூபிக்கப்படும் வரை சகலரும் குற்றமற்றவர்களாகக் கருதப்படுகின்றனர் என்பதை ஒழுக்காற்று அதிகாரிகள் கவனத்திற்கெடுத்துக் கொள்ளலாம். எனவே நீதி மன்றங்களில் குற்றத் தவறுக்காக குற்றஞ் சாட்டப்படும் போது உத்தியோகத்தரொருவரை இடைநிறுத்தம் செய்தலாகாது. அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார் அல்லது பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார் என்ற தவறுக்காக உத்தியோகத்தர் குற்றஞ் சாட்டப்படும் சந்தர்ப்பங்களில் அவரை வேலையிலிருந்து இடைநிறுத்தஞ் செய்வது கட்டாயமானதாகும். அத்தகைய உத்தியோகத்தரொருவரை மீளப் பதவியில் அமர்த்துவதற்கான நடவடிக்கை பிணைக்கள உத்தியோகத்தர்களின் விடயத்தில் தொடர்புடைய அமைச்சின் செயலாளரினாலும் இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் விடயத்தில் அரசாங்க நிருவாக அமைச்சின் செயலாளரினாலும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் உசாவி எழுத்திலான அவருடைய ஒருப்பாட்டுடன் எடுக்கப்படல் வேண்டும்.

18:3:2 சமூகத்திற் கெதிரான சட்ட மீறுகையை அல்லது தவறை இழைத்தார் எனக் குற்றஞ்சாட்டப்படும் உத்தியோகத்தரொருவரின் தொடர்பில் எதிர்கால நடைமுறை பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

(1) அத்தகைய தவறுகளுக்காக உத்தியோகத்தரொருவர் கட்டுக்காப்பில் எடுக்கப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்குமிடத்து அவர் கட்டாய லீவில் வைத்திருக்கப்படல் வேண்டும்.

(2) அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்து, ஒழுக்காற்று அதிகாரி குற்றஞ்சாட்டப்பட்ட தவறின் தன்மையானது அரசாங்க சேவை நலன்களுக்கு தீங்கானதல்லவெனக் கருதினால் அவர் மீளப் பதவியில் அமர்த்தப்படல் வேண்டும்.

(3) ஆனால் பதவியில் மீள அமர்த்துதல் அரசாங்க சேவைக்கு தீங்கானது என ஒழுக்காற்று அதிகாரி கருதினால் உத்தியோகத்தர் நீதிமன்ற வழக்கு பற்றி தீர்மானம் வழங்கப்படும் வரை வேலையிலிருந்து இடைநிறுத்தப்படல் வேண்டும். அவருக்கு வழங்கப்படத்தக்க சம்பளம் தாபன விதிக்கோவையின் 1/11-ஆம் அத்தியாயத்தின் கீழ் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

18.3.3 குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தரொருவர் தாமாகவே தமது குற்றமின்மையைத் தெரிவிக்குமிடத்தும் ஒழுக்காற்று அதிகாரி ஒழுக்காற்று விசாரணையொன்றை நடத்துவது பொருத்தமானதெனக் கருதுமிடத்தும் 12.1ஆம் உபபிரிவின் ஏற்பாடுகளை கருத்திற்கெடுத்துக் கொண்டபின் விசாரணை உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்படலாம்.

12. 18.6 பொலிசாரினால் அல்லது இலஞ்ச ஆணையாளர் திணைக்களத்தினால் அல்லது இந்த இரண்டு தரப்புகளினாலும் குற்றஞ்சாட்டப்பட்டு அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்காக வேலையிலிருந்து இடைநிறுத்தஞ் செய்யப்பட்ட, உத்தியோகத்தரொருவர் மீது தீர்மானமொன்றை வழங்குவதற்கு 6 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுக்குமிடத்து இடைநிறுத்தத் திகதியிலிருந்து 6 மாதங்கள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் மீளப் பதவியில் அமர்த்தாமல் அவருக்கு அரைச் சம்பளம் வழங்கப்படல் வேண்டுமென்பதுடன் ஒழுக்காற்று விசாரணை தொடர்ந்து செய்யப்படல் வேண்டும். ஒழுக்காற்று விசாரணையைத் துரிதப்படுத்துவதற்கும் கூட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

13. 21.6 முன்னைய பிரிவுகளின்படி உத்தியோகத்தரொருவரை பொருத்தமான முறையில் இடைநிறுத்தஞ் செய்யப்பட முடியாமலிருந்து புலன் விசாரணையின் அல்லது விசாரணையின் நலனில் அவர் தமது பதவியின் பணிகளைப் புரியாமலிருப்பது நல்லதாகவிருந்தால் அவர் இடமாற்றஞ் செய்யப்பட வேண்டும் அல்லது X11-ஆம் அத்தியாயத்தின் 20ஆம் பிரிவின் நியதிகளின்படி அவர் கட்டாய லீவில் வைத்திருக்கப்படல் வேண்டும். (1985இல் வெளியிடப்பட்ட தாபன விதிக்கோவையின் பாகம் 1)

14. 21.7 இடைநிறுத்தமொன்றுக்கு கட்டளை விடுக்கும்போது உத்தியோகத்தரொருவரின் குடும்பம் அனுபவிக்கும் இடர்ப்பாடுகளின் விளைவாக அவ்வுத்தியோகத்தரினால் எதிர்நோக்கப்படும் கஷ்டங்களையும் ஒழுக்காற்று அதிகாரி கருத்திற்கெடுத்துக் கொள்ள வேண்டும். போதியளவு சான்றுகளின்றி உத்தியோகத்தரொருவரை வேலையிலிருந்து இடைநிறுத்தி அவர் குற்றவாளியாகக் காணப்படாவிட்டால் அவரை மீளவும் பதவியில் அமர்த்துவது அரசாங்கத்திற்கு நட்டமென்பதையும் கருத்திற் கொள்ளல் வேண்டும். இது ஏனெனில் அவருக்கு அவர் செய்யாத வேலைக்கு நிலுவைப் பணத் தொகைகள் வழங்கப்படும் என்பதனாலாகும்.

..6

15. ஒழுக்காற்று அதிகாரி ஒவ்வொருவரும் ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் இச்சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் நிறுவனத்தில் நிலுவையாகவுள்ள ஒழுக்காற்று விசாரணைகளின் எண்ணிக்கையை அறிவித்தல் வேண்டும். செயலாளர்கள் அல்லாத ஒழுக்காற்று அதிகாரிகள் அறிக்கையை தங்களுடைய அமைச்சின் செயலாளருக்கு ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும். இந்த நடைமுறையைக் கைக்கொள்ளுவதன் மூலம் தமது அமைச்சின் கீழுள்ள சகல நிறுவனங்களினதும் ஒழுக்காற்று நடவடிக்கைகளும் சம்பந்தப்பட்ட செயலாளரினால் கண்டிப்பாக மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். மாகாண சபையின் பிரதான செயலாளர் மாகாண (சபையின்) முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு காலாண்டும் பூர்த்தி செய்யப்படுவதையடுத்து வரும் மாதத்தின் 10ஆந் திகதியளவில் படிவம் அரசாங்க நிருவாக, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் தாபனப் பணிப்பாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

16. 35/90ஆம் 35/90(1)ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளுக்குப் பதிலாக காலப் போக்கில் புதிய விசாரணை உத்தியோகத்தர்கள் குழாம் ஒன்று வெளியிடப்படும்.

17. இச்சுற்றறிக்கையின் "ஒழுக்காற்று அதிகாரி" என்ற பதம் அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பில் அமைச்சரவையும் அரசாங்க சேவை ஆணைக்குழுவும் நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம், ஒழுக்காற்று நடவடிக்கை ஆகியவற்றைச் செய்வதற்கு அதிகாரங்களைக் கையளித்துள்ள நிறுவனங்களின் தலைவர்கள் யாபேரும் எனப் பொருள்படுவதோடு அவர்களை உள்ளடக்குகின்றது.

ஒப்பம். எம்.என்.ஜுனைட்.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,